TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081671

Cr.No14/2021/AC/VPM

1. District மாவட்டம் : விழுப்புரம் PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year ஆண்டு : 2021 FIR No.: முதஅ. எண் : Date நாள் : 12.10.2021

2. (i) Act சட்டம்: P.C.Act - 1988 (Amendment) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: as amended in P.C Act 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11.10.2021 Date from நாள் முதல் : 11.10.2021 Date to நாள் வரை : 12.10.2021
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.10.2021 Time நேரம் :
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 42 கி.மீ, தெற்கு திசை
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.ஜெகதீஸ்வரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் : இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர். (g) Address முகவரி : கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. சேரமணி, மண்டல மேலாளர், வனத்தோட்ட கழகம், புதுக்கோட்டை.

2) திரு. சங்கர் கணேஷ், வனவர், உளுந்தூர் பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம். மற்றும் சம்மந்தப்பட்ட நபர்கள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 12.10.2021 ந்தேதி காலை 03.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திரு.ப,ஜெகதீஸ்வரன், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திரு.ப.ஜெகதீஸ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். பெறுநர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/517/2021, நாள்:12.10.2021 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை வனசரக அலுவலகம் - 11.10.2021 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:12.10.2021.11.10.2021 ஆம் தேதி, காலை 10.30 மணியளவில், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான திரு.ப.ஜெகதீஸ்வரன் ஆகிய நான் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வனசரக அலுவலகத்தில திரு.நேசமணி, மண்டல மேலாளர், வனத்தோட்ட கழகம், புதுக்கோட்டை என்பவர் திருக்கோவிலூர் வனத்தோட்ட கழக மண்டல மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்துள்ளார் என்றும், அப்போது திருக்கோவிலூர், சங்கராபுரம், தியாகதுருகம் மற்றும் பகண்டை ஆகிய நான்கு வனசரகத்திலும் மரகன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்கள் செய்த பணிக்காக விடுவிக்கப்பட்ட ஒப்பந்ததொகைகளுக்கு ஏற்றவாறு கமிஷன் என்ற பெயரில் லஞ்சத்தொகை அந்தந்த வனச்சரகர்கள் மூலம் வசூலிக்கப்பட்டு அதனை உளுந்தூர்பேட்டைவனவர் திரு.சங்கர்கணேஷ் அவர்களிடம் ஒப்படைக்கப்படுவதாக

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/10/21 | ந. [signature] 12/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ந. தேவநாதன்
Rank: நிலை ....................No. எண் .........
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
ஊ.த.க. பிரிவு, விழுப்புரம்.

எனக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் நான் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கு பணியில் இருந்த தங்களிடம் உளுந்தூர்பேட்டை வனவர் அலுவலகத்தை திடீராய்வு மேற்கொள்வது சம்மந்தமாக கலந்தாலோசித்தேன். பின்பு காவல் குழுவினருடன் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 12.00 மணிக்கு புறப்பட்டு சுமார் 13.00 மணியளவில் உளுந்தூர்பேட்டை, வனவர் அலுவலகத்தின் அருகே வந்தபோது அலுவலகத்தில் இருந்து ஒரு நபர் ஒரு பையை முதுகில் மாட்டிக்கொண்டு வெளியே வந்தார். அப்போது அலுவலக வாயிலில் நின்று கொண்டிருந்த ஒரு நபரிடம் வனவர் சங்கர்கணேஷ் அலுவலகத்தில் உள்ளாரா என கேட்டபோது அவர் உங்கள் எதிரே வண்டியில் செல்கிறாரே அவர்தான் சங்கர் கணேஷ் என்று கூறினார். பின்பு நாங்கள் எங்கள் வாகனத்தை திருப்பி அவரை பின்தொடர்ந்து சென்றபோது அவர் உளுந்தூர் பேட்டை, சிவன் கோயில் வீதிக்கு சென்று ஒரு வீட்டின் அருகே தனது இரு சக்கர வாகனத்தை நிறுத்தினார். அப்போது நாங்கள் எங்கள் வாகனத்தை அவரது வாகனத்தின் அருகில் நிறுத்திவிட்டு அவரிடம் சென்று எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு அவரது பெயரை கேட்டபோது அவர் தனது பெயர் சங்கர்கணேஷ் என்றும் அவர் உளுந்தூர்பேட்டை வனசரகர் அலுவலகத்தில் வனவராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். நாங்கள் எங்களுக்கு கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் அவரை சோதனை செய்ய வந்துள்ள விபரத்தை கூறி அவரையும் அவர் வைத்திருந்த பையையும் சோதனை செய்தேன். அப்போது அவரது பையில் காகிதத்தில் சுற்றப்பட்டு இருந்த நான்கு பணக்கட்டுகளாக ரூபாய் 11,64,500/ இருந்தது மேற்படி தொகை குறித்து அவரிடம் விசாரிக்க அவர் இந்த தொகை புதுக்கோட்டை வனத்தோட்ட கழகத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்து வரும் திரு.நேசமணி, என்பவர் திருக்கோவிலூர் வனத்தோட்ட கழக மண்டல மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்தபோது அவரது நிர்வாகத்திற்குட்பட்ட திருக்கோவிலூர் வனசரகர் சத்தியமூர்த்தி, சங்கராபுரம் வனசரகர் திரு.வெங்கடாசலம், தியாகதுருகம் வனசரகர் ஹரிகரன் மற்றும் பகண்டை வனசரகர் பாலசுப்ரமணியம் ஆகியோர் தங்களது வனசரகங்களில் மரகன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்களால் செய்யப்படும் பணிகளுக்கு திரு.நேசமணி அவர்களால் விடுவிக்கப்பட்ட நிதியில் 25 சதவீத தொகையை வசூலித்து சங்கராபுரம் வனசரகரின் டிரைவர் திரு.சரண்ராஜ் என்பவர் மூலம் என்னிடம் கொடுக்கப்பட்டது என்று கூறினார். பின்பு மேற்படி பண கட்டுகளை பார்வையிட்டபோது திருக்கோவிலூர் வனசரகர் சத்தியமூர்த்தி என்பவர் கொடுத்த ரூபாய் 3,97,100/- த்தை ஒரு வெள்ளை நிற காகிதத்தில் "TKR sep 21 500X794=3,97,000, 100X=100 3,97,000" என எழுதப்பட்டு அதனை பணத்தின் கட்டில் வைக்கப்பட்டிருந்தது. சங்கராபுரம் வனசரகர் திரு.வெங்கடாசலம் என்பவர் கொடுத்த ரூபாய் 2,63,000/- பண கட்டில் "SPM 263000" என எழுதப்பட்ட தினசரி நாளிதழின் துண்டு சீட்டு வைக்கப்பட்டிருந்தது, தியாகதுருகம் வனசரகர் ஹரிகரன் என்பவர் கொடுத்த ரூபாய் 1,79,400/- பண கட்டில் "TGM Range Rs.1,79,400" என எழுதப்பட்ட காக்கிநிற பேப்பர் சுற்றப்பட்டிருந்தது மற்றும் பகண்டை வனசரகர் பாலசுப்ரமணியம் என்பவர் கொடுத்த ரூபாய் 3,97,100/- பண கட்டில் "Pagandai 3,25,000/-" என எழுதப்பட்ட காக்கிநிற கவர் சுற்றப்பட்டு விழுப்புரம் கலர்ஸ் என்ற துணிக்கடையின் பையில் தனித்தனி காகிதத்தில் சுற்றி மேற்படி தொகை வைக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி பையில் காக்கிநிற கவரில் 1) Pagandai 325000, 2) TGM 179400 3) Shankarapuram 263000/- 4) Trk -397100 என எழுதி அதன் கூடுதல் தொகையை அதன் அடியில் 1164500 என எழுதப்பட்டிருந்தது. பின்பு மேற்படி தொகையினை எப்போது திரு.நேசமணி அவர்களிடம் கொடுப்பீர்கள் என்று சங்கர்கணேஷ் அவர்களிடம் கேட்டபோது உளுந்தூர்பேட்டை பைபாஸ் ஜங்கஷனில் மாலை 4 மணிக்கு வந்து

வாங்கிக்கொள்வார் என உளுந்தூர்பேட்டை வனசரகர் திரு.ஏழுமலை செல்போனில் தெரிவித்ததாக கூறினார். அதன் பேரில் நான் திரு.சங்கர்கணேஷ் அவர்களை அழைத்துக்கொண்டு உளுந்தூர்பேட்டை பைபாஸ் அருகில் திரு.நேசமனி அவர்களின் வருகைக்காக காத்திருந்தோம். அவர் சொன்னபடி மாலை 4 மணிக்கு வரவில்லை பின்பு அவரே போன் செய்து மாலை சுமார் 7.30 மணிக்கு வருவதாக தெரிவித்தார். மீண்டும் அவர் வரும் வரை உளுந்தூர்பேட்டை பைபாசிலேயே மறைவாக காத்திருந்தோம். பிறகு திரு.நேசமணி அவர்கள் சுமார் 8 மணிக்கு உளுந்தூர் பேட்டை பைபாஸ் ஜங்கஷன் ரவுண்டானா அருகில் பாலத்தின் கீழ் வந்து தனது மகிந்திரா ALTURAS TN 55BX 7609 என்ற எண்ணுள்ள காரில் வந்து இறங்கினார். மேற்படி தொகை ரூபாய் 11,64,500/-ஐ திரு.நேசமணி அவர்களிடம் சங்கர்கணேஷ் கொடுக்க சென்றார். அப்போது திரு.நேசமணி அவர்கள் சங்கர்கணேஷிடம் வனசரகர்கள் கொடுத்த பணம் சரியாக உள்ளதா என கேட்டுக்கொண்டே பணத்தை வாங்கி தனது காரில் வைத்தார். அதனை கவனித்த நானும், லஞ்சஒழிப்பு போலீசாரும் அவர்களின் அருகில் சென்று திரு.நேசமணி அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரிடம் அவரை பற்றியும், சங்கர்கணேஷ் அவர்களிடம் வாங்கிய தொகை பற்றியும் விசாரித்தபோது அவர் தான் புதுக்கோட்டை மண்டல வனதோட்ட கழக மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், திருக்கோவிலூர் மண்டல வனதோட்ட கழக மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்தபோது திருக்கோவிலூர், சங்கராபுரம், பகண்டை, தியாகதுருகம் ஆகிய வனசரகர்கள் மர கன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்களால் செய்யப்படும் பணிகளுக்கு அனுமதிக்கப்பட்ட நிதியில் இருந்து 25 சதவீதம் கமிஷனாக பெற்று கொடுத்தனுப்பிய தொகை என்று கூறினார். பின்பு மேற்படி தொகை சங்கர்கணேஷ், திரு.நேசமணிக்கு கொடுக்க வந்த லஞ்சத்தொகைதான் என ஊர்ஜிதமானதால் மேற்படி தொகை, பணகட்டுகளில் வைக்கப்பட்டிருந்த காகித துண்டு சீட்டுகள், மேற்படி நான்கு சரகங்களின் தொகை விபரம் எழுதப்பட்ட காக்கிநிற பாதி கவர் மற்றும் தொகை வைக்கப்பட்டிருந்த கலர்ஸ் என எழுதப்பட்டிருந்த விழுப்புரம் துணிகடையின் கைப்பை ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு, திரு.சங்கர்கணேஷ், திரு.நேசமணி மற்றும் அவருடன் வந்த மூன்று நபர்களையும் அழைத்துக்கொண்டு அருகில் இருந்த உளுந்தூர்பேட்டை வனசரக அலுவலகத்தற்கு அழைத்து வந்து திரு.நேசமணி அவர்களையும், அவரது காரையும் சோதனை செய்தேன் அப்போது காரில் இருந்த ரூபாய் 26,30,000/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து முப்பதாயிரம்) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் விசாரித்தபோது மேற்படி தொகையில் ரூபாய் 24,00,000/- மட்டும் புதுக்கோட்டை, காரைக்குடி மற்றும் அறந்தாங்கி மண்டலங்களில் மர கன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்கள் செய்யப்படும் பணிகளுக்கு அவரால் வழங்கப்பட்ட நிதியில் அவருக்கு கமிஷனாக கிடைத்த 25 சதவீத தொகை என கூறியதால் மேற்படி தொகை 24,00,000/- த்தையும், அந்தபணம் கொண்டுவரப்பட்ட மங்களம் ஷாப்பிங் ஜவுளி & ரெடிமேட்ஸ், ராயபுரம் என எழுதப்பட்ட கட்டபையை விசாரணைக்காக கைப்பற்றினேன். மீதி தொகை ரூபாய் 2,30,000/-த்தை திரு.நேசமணி நண்பர் ஷநாவாஸ் தொகை என கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால் அந்த தொகை ஷநாவாஸ் அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி வகையில் மொத்தம் ரூபாய் 35,64,500/- ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும், மேற்படி திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூபாய் 35,64,500/- சம்மந்தமாக திரு.நேசமனி, மண்டலமேலாளர், வனத்தோட்ட கழகம், புதுக்கோட்டை, திரு.சங்கர்கணேஷ், வனவர், உளுந்தூர்பேட்டை, திரு.ஷாநாவாஸ், திரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் தினேஷ் ஜான்செல்டன் ஆகிய ஐந்து நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீராய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை லஞ்சத்தொகைதான் என்பது எனது விசாரணையில் தெரியவருவதால் மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய 1.திரு.நேசமனி, மண்டல மேலாளர்,

வனத்தோட்ட கழகம், புதுக்கோட்டை, 2.திரு.சங்கர்கணேஷ், வனவர், உளுந்தூர்பேட்டை மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள (XXXXXX) ஒப்பம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர்.<u>இணைப்பு</u> 1. ரொக்கம் 35,64,500/- (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) 2. ஐந்து நபர்களின் வாக்குமூலங்கள்.

Sir Received the complainant and registered the same in Viluppuram V&AC, Cr.No.14/2021 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in P.C (Amendment) Act 2018 on 12.10.2021 at 04.00hrs (sd) N.Devanathan, 12.10.2021, V&AC, Viluppuram.

இதன் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

12/10/21

(ந.தேவநாதன்)
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.